# ஜெபத்தின் தங்க திறவுகோல்

# The Golden Key of Prayer



**சி.எச். ஸ்பர்ஜன்**

**(1834-1892)**

**பிரசங்கிகளின் இளவரசன்**

**Prince of Preachers**

Reformed Baptist Church

# ஜெபத்தின் தங்க திறவுகோல்

**"என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்." எரேமியா (33:3)**

இந்த வார்த்தையானது எரேமியா இருண்ட சிறையில் அடைபட்டிருந்த போது, தேவனால் கொடுக்கப்பட்டது. ஒரு சிறைச் சாலையில் அடைபட்டிருந்த தேவ ஊழியனுக்கு, இது மகிழ்ச்சியையும் நம்பிக்கையின் பிரகாசத்தையும் கொடுக்கிறதாயிருந்தது. உன்னதமாக எழுதப்பட்ட அநேக புஸ்தகங்கள் சிறைச் சாலையில் இருந்து உருவானவைகளாய் இருந்திருக்கின்றன. மிகச்சிறந்த உதாரணமாக ஜான் பனியனின் "**மோட்ச பிரயாணத்தை**" நாம் சொல்லக் கூடும்.

தேவனுடைய மக்கள் தங்களுடைய இக்கட்டான வேளைகளில் தேவனின் மிகச்சிறந்தவைகளை கண்டிருக்கின்றார்கள். தேவன் எப்பொழுதும் நல்லவராகவே இருக்கிறார். ஆனாலும் தம்முடைய மக்களின் இருள் சூழ்ந்த காலங்களில் அவர் மிகச்சிறந்தவைகளை வெளிப்படுத்துகிறார். உபவத்திரவம் என்கிற கடலில் மூழ்குகிறவர்கள் விலையேறப்பெற்ற முத்துக்களை எடுத்து வருபவர்களாய் இருந்திருக்கின்றார்கள். நமக்கு உபவத்திரவங்கள் பெருகுகையில் அவருடைய ஆறுதலும் கிறிஸ்துவுக்குள் நம்மில் பெருகுகிறதாய் இருக்கிறது. இருண்ட சிறையில் அடைபட்டிருக்கின்ற தேவனுடைய பிள்ளைகள் மகிழ்ச்சியான இந்த வார்த்தையைக் கேட்பார்களாக. பாரப்பட்ட இருதயமும் இந்த மெல்லிய தேவனின் சத்தத்தை கேட்கட்டும். இந்த வசனத்தை மூன்று பகுதிகளாக பேசவும், தேவ ஆவியானவர் தாமே இந்த சத்தியத்தை விளங்கப்பண்ணவும் உதவி செய்வாராக.

முதலாவது "**என்னை நோக்கிக் கூப்பிடு**" அதாவது ஜெபம் கட்டளையிடப்பட்டிருக்கிறது. இரண்டாவதாக "**நான் உனக்கு உத்தரவு கொடுப்பேன்**" அதாவது பதில் கொடுப்பேன் என்று வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. மூன்றவதாக "**நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்**" அதாவது விசுவாசம் உற்சாகப்படுத்தப்பட்டிருக்கிறது.

Reformed Baptist Church

## 1.ஜெபம் கட்டளையிடப்பட்டிருக்கிறது:

இங்கு ஜெபம் ஆலோசனையாக கொடுக்கப்படவில்லை அல்லது நன்றாய் இருக்கும் என்று சொல்லப்படவுமில்லை. ஜெபிக்கும்படியாக அழைப்பு கொடுக்கப்படுகின்றது. உன்னுடைய சொந்த ஆத்துமாவுக்கு நன்மை பயக்கும் தேவனுடைய அன்பு கட்டளை இது.பொதுவாக மனிதன் ஜெபம் நல்லது என்று அறிந்திருந்தாலும் அதைத் தேடி வராத தன்னையுள்ளவன். ஆகவேதான் தேவன் இதை அவருடைய கட்டளையாக கொடுத்திருக்கிறார். ஏன் தேவன் இதைக் கட்டளையாக கொடுக்கவேண்டும்? ஏனென்றால் தேவனை அறிந்தவர்களும் இதைக்காட்டிலும் உலகத்தின் அநேக காரியங்களை தேடி ஓடுகிறவர்களாய் தேவனை அறிந்தும் காணப்படுகிறார்கள்.

ஆனால் தேவனோடு ஜெபத்தில் மன்றாடவும், அவரோடு கொள்ளும் உறவைத் தேட மறந்து விடுகிறோம். தேவ வார்த்தையை வாசித்து, தியானித்து அதை உட்கொள்ளவும் மறந்துவிடுகிறோம். உலகத்திற்கு அநேக மணி நேரங்கள்! கிறிஸ்துவுக்கோ ஒரு சில வினாடிகள்! நமது மிகச்சிறந்த பெலத்தையும் நேரத்தையும் உலகத்திற்கு கொடுத்து, கிறிஸ்துவுக்கோ பெலம் இழந்தவர்களாய், நேரமற்றவர்களாய் காணப்படுகிறோம். ஆகவேதான் "**என்னை நோக்கிக் கூப்பிடு**" என்று கட்டளை கொடுக்கப்படுகின்றது. நாம் தேவனை நோக்கிக் கூப்பிடுவதை மறுக்கிறவர்கள் என்பதை தேவன் அறிந்திருக்கிறார். **"நீ நித்திரை பண்ணுகிறது என்ன? எழுந்து உன் தேவனை நோக்கி வேண்டிக்கொள்"(யோனா1:6)** இது யோனாவுக்கு மாத்திரமல்ல, நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படும் எச்சரிப்பூட்டும் செய்தி.

நாம் அநேக சமயங்களில் பாவத்தைக்குறித்த உணர்வோடு போராடுகிற இருதயத்தை கொண்டவர்களாக இருக்கின்றோம் என்று தேவன் அறிந்திருக்கிறார். சாத்தான் "நீ ஏன் ஜெபிக்க வேண்டும்? நீ தேவனிடத்தில் ஜெபிக்க என்ன நம்பிக்கையுண்டு! தேவனிடத்தில் வர உனக்குத் தகுதியில்லையென்று சொல்லக்கூடும்" ஆகவே தான் தேவன் இவ்விதமாக ஒரு கட்டளையை கொடுத்திருக்கிறார். ஏனென்றால் நாம் இவ்விதமான எண்ணங்களோடு ஜெபத்தை விட்டு விடக்கூடும். தேவன் எனக்கு கட்டளை கொடுத்திருப்பாரானால் நான் எவ்வளவு தகுதியற்றவனாய் இருந்தாலும் அவருடைய கிரிபாசனதத்தண்டை கிட்டிச்சேருவேன். இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் என்று அவர்


Reformed Baptist Church

சொல்லியிருக்கிறதினிமித்தம் ஜெபிக்க எனக்கு வார்த்தைகள் வரவில்லை என்றாலும் என் சிந்தனைகள் ஜெபத்தில் அலைந்து திரிந்தாலும், 'கர்த்தாவே எனக்கு ஜெபிக்க போதித்தருளும்' என்று அவரிடத்தில் கெஞ்சி கேட்பேன்.

நாம் அடிக்கடி அவிசுவாசக்குழியில் விழுவதினாலும் இந்தக் கட்டளை நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அவிசுவாசம் மெதுவாக நம் காதுகளில் வந்து, "இந்த இந்த காரியங்களில் தேவனைத் தேடுவதில் என்ன பிரயோஜனம் இருக்கிறது? இந்த சிறிய காரியங்களுக்கு கூட நீ தேவனை தேட வேண்டுமா? வாழ்க்கையின் பல காரியங்களுக்கு நீ ஜெபித்து என்ன பிரயோஜனம்? உனக்கு தேவன் செவிகொடுக்க மாட்டார்! நீ ஒரு பாவி! தேவனிடத்தில் வர உனக்குத் தகுதியில்லை! இது மிகக்கடினம், இது தீர்க்கக்கூடாத பிரச்சனை!" என்று பல சத்தங்களை ஒலித்துகொண்டே இருப்பான். ஆகவேதான் என்னைநோக்கிக் கூப்பிடு என்று தேவன் அழைக்கிறார்.

நீ வியாதிபட்டிருக்கிறாயா? பரம வைத்தியரை நோக்கிக் கூப்பிடு, உன்னுடைய கால சூழ்நிலைகள் குழப்பமானதாய் காணப்படுகிறதா? மனிதர்களுக்கு முன்பாக நான் சரியான காரியங்களை செய்ய முடியாதோ என்று கலங்கி நின்றுகொண்டிருக்கிறாயா? என்னை நோக்கிக் கூப்பிடு! உன்னுடைய பிள்ளைகள் உனக்கு வருத்தத்தை கொண்டுவருகிறார்களா? நன்றியில்லாத பிள்ளைகளின் வார்த்தைகள் உன்னை உறுத்துகின்றனவா? உன்னுடைய கவலைகள் ஊசி முனைகளைப்போல உன்னைக் குத்திக் கொண்டுவருகின்றனவா? என்னை நோக்கிக் கூப்பிடு! தேவன் தம்முடைய வார்த்தையில் இவ்விதமாய் சொல்லியிருக்கிறபடியால், அது ஒருக்காலும் மாறாததும் என்றென்றும் நிலைத்திருக்கிறதுமாய் இருக்கிறது. வேதத்தில் பல இடங்களில் ஜெபிக்கும்படியாக கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்துகொள்ளுவது நமது ஆத்துமாவிற்கு மிகப் பிரயோஜனமாக இருக்கும்.

**'ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு', 'அவர் சமூகத்தில் உங்களுடைய இருதயத்தை ஊற்றிவிடுங்கள்', 'கர்த்தர் சமீபமாய் இருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்', 'கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள், தட்டுகள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்', 'விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்', 'இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்'** இவைகள் அனைத்தையும் என்னால் சொல்லித்தீராது.

Reformed Baptist Church

பை நிறையக் காணப்படும் முத்துக்களாகிய இவைகளின் இரண்டு அல்லது மூன்று முத்துகளை எடுத்துக் கொள்ள நான் விரும்புகிறேன். தேவன் தம்முடைய வார்த்தையில் கட்டளை கொடுத்ததுமல்லாமல், சில சமயங்களில் தமது ஆவியானவரைக் கொண்டு ஜெபிக்கத்தூண்டுகிறார். இவ்விதமான வேளைகளில் அல்லது ஜெபிக்கும் படியான வாஞ்சையை கர்த்தர் நமக்குக் கொடுக்கப்படியான நேரங்களில் ஜெப வாஞ்சையையும் இரட்டிப்பாக்கிக் கொள்வோம். ‘காற்றுள்ள போதே தூற்றிக்கொள்’ என்ற விதமாய் நமக்கு கொடுக்கப்படும் ஜெப தாகத்தை பயன்படுத்திக் கொள்வோம். இந்தநேரங்களில், திரளாய் விதைப்போம், யாக்கோபை போல மன்றாடுவோம். அப்போது இஸ்ரவேல் என்ற பெயரை பெறுவோம். பசுமையான இந்த வேளையில் விதைக்கும் விதைப்பு திரளாய் அறுவடை செய்ய நமக்கு கிருபையாய் இருக்கும்.

## 2.ஜெபத்திற்கு பதிலளிக்கப்படும் என்று வாக்குப் பண்ணப்பட்டிருக்கிறது:

தேவன் ஜெபத்திற்கு பதிலளிக்கமாட்டார் என்ற கொடிய அவிசுவாச எண்ணத்திற்கு நாம் ஒரு வினாடியும் நம்பி இணங்கக்கூடாது. தேவன் கிறிஸ்துவில் நம்மை வெளிப்படுத்தியிருக்கிற தன்மைகளை நினைவு கூறுவோம். அவர் தம்மை கிருபையும் சத்தியமும் நிறைந்தவராய், அன்புள்ளவராய்,தம்மை வெளிபடுத்தியிருக்கும் பொழுது தம்மை நோக்கித் தாழ்மையாய் மன்றாடுகிற, அவர் சமூகத்தையும் கிருபையையும் தேடுவர்களுக்கு அவர் எவ்விதம் பதில் அளிக்காமல் இருப்பார்? நம்முடைய கதறலை நினைவுகூர்ந்து பதிலளிக்க கூடாதபடிக்கு அவர் அநீதியும் இறக்கமற்றவரும் அல்லவே!

அடுத்தது, அவருடைய கடந்த கால கிருபையின் செயல்பாடுகளை நினைவுக்கூருவோம். தம்முடைய சொந்த குமாரரென்றும் பாராமல் நமக்காக அவரை ஒப்புக்கொடுத்தவர் மற்றெல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பது எப்படி? நான் ஒரு குற்றமுள்ள பாவியாக அவருக்கு சத்துருவாக இருந்தபொழுது, எனக்கு செவிகொடுத்து, இரட்சித்து, நீதிமானாக்கிய தேவன் என்னுடைய நிர்பந்தமான நிலையை நானே உணரக்கூடாத நிலையில் காணப்பட்ட பொழுது என்னைத் தேடி இரட்சித்த தேவன், இப்பொழுது அவருடைய பிள்ளையாக இருக்கும் என்



Reformed Baptist Church

கூப்பிடுத்தலை எவ்விதம் கேட்காதவராய் இருக்கக்கூடும்! ஜெபம் பிரயோஜனமற்றது என்று எண்ணுவாயானால், நீ கல்வாரியை சரியான விதத்தில் புரிந்துகொள்ளவில்லை.

தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டு. அவர் ஒருபோதும் பொய் சொல்லுகிறவர் அல்ல, **'ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு. நான் உனக்கு உத்திரவு அருளிச் செய்வேன்', 'நீங்கள் ஜெபத்தில் எவைகளைக் கேட்கிறீர்களோ, அவைகளை பெற்றுக்கொண்டோமென்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாயிருக்கும்.', 'தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மை தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறார் என்றும் விசுவாசிக்க வேண்டும்'(எபி 11:6)** நம்முடைய சொந்த வாழ்க்கையிலும் தேவன் பதிலளிக்கிறார் என்று நாம் மெய்யாலும் சாட்சியிடக்கூடும். மற்றவர்களைப் பற்றி அல்ல, என் சொந்த வாழ்க்கையிலேயே எந்த சந்தேகமும் இல்லாமல், தேவன் பதிலளிக்கிறவர் என்பதை கண்டிருக்கிறேன். அதை நிச்சயமாய் என்னுடைய வாழ்க்கையில் நிரூபிக்க முடியும்.

ஜெபம் ஒருக்காலும் வீணல்ல. என்னுடைய இரட்சிப்பு என்னுடைய பெற்றோர்களால் அதிக ஊக்கத்தோடும் பாரத்தோடும் ஜெபித்த ஜெபத்தின் பதிலே. தேவன் அவர்களுடைய கண்ணீரைக் கண்டதினிமித்தம் நான் இப்பொழுது சுவிசேஷத்தை பிரசங்கிக்கின்றேன். என்னால் முடியாத அநேக காரியங்களில் தேவனையே முற்றிலும் சார்ந்து ஜெபித்த வேளைகளில் தேவன் ஆச்சரியமான விதங்களில் அவைகளுக்கு பதில் கொடுத்திருக்கின்றார். என்னுடைய ஊழியங்களில் நடந்த அநேக காரியங்களைச் சொல்லப்போனால் அவைகள், நிச்சயமாய் தேவன் ஜெபத்திற்கு அளித்த பதில்களே. தேவன் ஒருமுறை இருமுறையல்ல, கணக்கிலடங்காத வேளைகளில் என் ஜெபத்திற்கு பதில் அளித்திருக்கிறார்.

ஆகவே எல்லாவற்றிற்கும் தேவன் பலதிலளிப்பார் என்ற நிச்சயத்தோடு அவருடைய பாதங்களுக்கு எடுத்துச் செல்லும்போது, மழை எப்படி நிச்சயமாய் பொழியுமோ அப்படியே ஜெபமும் ஆசீர்வாதத்தை பொழிகிறதாய் இருக்கிறது. மன்றாட்டு ஜெபம் வெகுவாய் பெலன் கொடுக்கிறதாய் இருக்கிறது. விதைத்த நான் அநேக முறை அதன் பலனை அறுத்திருக்கிறேன். உங்களுடைய வாழ்க்கையில் தேவன் அவ்விதமாக ஜெபத்தைக் கேட்டு பதிலளிக்கவில்லையா? இல்லையென்றால்

Reformed Baptist Church

உங்களின் கிறிஸ்துவ பக்தி என்னவாயிற்று? தேவன் பதிலளிக்கிறார் என்ற நிச்சியத்தைக் கற்றுக்கொள்ளுங்கள்.

ஜெபமானது அவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு ஏறெடுக்கப்பட வேண்டும். தேவன் ஜெபத்திற்கு பதிலளிக்கிறார் என்று சொல்லும்பொழுது நாம் கேட்பதை அவர் அப்படியே கொடுப்பார் என்றல்ல. எது சிறந்ததோ அதை அவர் கொடுப்பார். நாம் வெள்ளியைக் கேட்போமானால் அவர் தங்கத்தைக் கொடுப்பார். ஒருவேளை முள்ளை எடுத்துப்போடும் என்று ஜெபிப்போமானால், '**என் கிருபை உனக்குப் போதும்**' என்று சொல்லுவார். ஆகவே நம்முடைய ஒவ்வொரு ஜெபத்தையும் **'என் சித்தத்தின் படி அல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது'** என்று உள்ளான உணர்வோடு ஜெபிப்போமாக.

## 3.விசுவாசத்திற்கான ஊக்கம்:

'நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரியகாரியங்களை அறிவிப்பேன்' இந்த வார்த்தையானது, சிறைச்சாலை இருந்த தீர்க்கத்தரிசிக்கு கற்றுக்கொடுக்கும்படியாக அனுப்பப்பட்ட வார்த்தை என்பதை மறந்துவிட வேண்டாம். ஆகவே தேவனுடைய வார்த்தையைக் கற்றுக்கொள்ளும் ஒவ்வொருவருக்கும் இது உரியதாகும். தேவனுடைய உன்னத இரகசியங்களை தேவனுக்காக ஜெபத்தில் காத்திருப்பின் மூலம் நாம் கற்றுக்கொள்ளலாம். நேபுகாத்நேச்சாரின் கனவின் அர்த்தத்தை கல்தேயரின் சாஸ்திரிகளும் ஜோசியர்களும் மந்திரவாதிகளும் சொல்லமுடியாதபோது தானியேல் என்ன செய்தான்? **"தானியேல், தன் வீட்டிற்குப்போய் தானும் தன தோழரும் பாபிலோனின் மற்ற ஞானிகளோடே கூட அழிக்கப்படாதபடிக்கு இந்த மறைபொருளைக் குறித்து பரலோகத்தின் தேவனை நோக்கி இரக்கம் கேட்கிறதற்காக அனனியா மிஷாவேல், அசரியா என்னும் தன் தோழருக்கு இந்தக் காரியத்தை அறிவித்தான்"(தானி 2:17,18)**

புதிய ஏற்பாடு தானியேலான யோவான், ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்டிருந்த புஸ்தகத்தை வாசிக்கவும், பார்க்கவும் என்ன செய்தான்? யோவான் அழுது விண்ணப்பித்தான், அப்பொழுது யூதா கோத்திரத்து சிங்கமான ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளை உடைத்தார். ஆம்! அந்த புத்தகம் திறக்கப்படுவதற்கு முன்னதாக "**நான் மிகவும் அழுதேன்**" என்று சொல்லப்பட்டிருக்கிறது.



Reformed Baptist Church

கண்ணீரின் ஜெபம் பதிலளிக்கப்பட்டது. ஊழியத்தில் இருக்கிற அருமையான ஊழியர்களே! ஞாயிறு ஆசிரியர்களே! இயேசுவின் பள்ளியில் படிக்கிற உங்களுக்கு ஜெபமே உன்னதமான தேவனுடைய காரியங்களைக் கற்றுக்கொடுக்கும். தானியேலைப் போல, யோவானைப் போல தேனுடைய விலையேறப்பெற்ற சத்தியம் உனக்குத் திறக்கப்படும். **“அதை வெள்ளியைப் போல நாடி, புதையல்களை தேடுகிறதைப் போல் தேடுவாயாகில் அப்பொழுது கர்த்தருக்கு பயப்படுதல் இன்னதென்று நீ உணர்ந்து தேவனை அறியும் அறிவைக் கண்டடைவாய்.”(நீதி 2:4,5)**

மார்டின் லூத்தர், “நன்றாய் ஜெபித்தவன், நன்றாகப் படித்தவன்” என்று அருமையாக சொல்லியிருக்கிறார். ஜெபம் இருப்புத்தாழ்ப்பாழ்களை உடைத்து, மறைந்திருக்கிற பொக்கிஷங்களை வெளிக்கொண்டுவரும். பரலோக இராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது. பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக் கொள்ளுகிறார்கள். ஜெபம் என்ற கருவியோடு நீ செயல்படும்போது உனக்கெதிராய் ஒன்றும் நிற்கமுடியாது. ஒரு மொழிப்பெயர்ப்பில் ‘நீ அறியாத பெரிய மறை பொருளானவைகளை காண்பிப்பேன்’ என்று சொல்லப்படுகிறது. இவ்வொன்றில் ‘பெரிய பாதுகாக்கப்பட்டவைகளை உனக்கு காண்பிப்பேன்’ என்று சொல்லப்படுகிறது. அருமையான சகோதரரே, கழுகளின் கண்கள் காணக்கூடாதவைகளையும், தத்துவங்களால் அறியக்கூடாதவகளையும் மன்றாட்டின் ஜெபத்தின் மூலம் நாம் அறிந்துகொள்ள முடியும். மன்றாட்டு ஜெபம் ஒரு கிறிஸ்தவனை கர்மேல் பர்வதத்திற்கு அழைத்து சென்று, வானத்தை மேகத்தால் நிரப்பவும், பூமியின்மேல் மழையைப் பொழிந்தருளவும் செய்கிறது. மன்றாட்டு ஜெபம், பிசகா மலையின் உச்சிக்கு உன்னை அழைத்துச் சென்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சுதந்தரத்தை பார்க்கச் செய்கிறது. உன்னை தாபோர் மலைக்கு அழைத்துச் சென்று மருரூபமாக்குகிறது. நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை அறிவிப்பேன் என்ற வாக்குத்தத்தம், பாடுகளின் ஊடாய் கடந்து செல்லுகிறவர்களுக்கும் சரியாய்ப் பொருந்தும். எரேமியாவின் சாட்சி இப்படியாகவே இருக்கிறது. தாவீதின் சாட்சியும், **“நெருக்கத்திலிருந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன், கர்த்தர் என்னைக் கேட்டருளி விசாலத்திலே வைத்தார்”(சங் 118:5)** அவ்விதமாகவே இருக்கிறது. “நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய், நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின் படியே நமக்குச் செய்ய



Reformed Baptist Church

வல்லவராயிருக்கிறார்." 2 இராஜாக்கள் புஸ்தகத்தில் விதவையானவர் எலியா தீர்க்கதரிசியினிடத்தில் வந்தால். "என் புருஷன் இறந்து போனான், கடன் கொடுத்தவன் இப்பொழுது என் இரண்டு குமாரர்களையும் அடிமையாக்கிக்கொள்ள வந்தான் என்றாள்." ஒருவேளை எலியா அவளுடைய கட்டனை அடித்துவிடுவான் என்று எண்ணியிருக்கலாம். ஆனால் கடன் அடைத்ததுமல்லாமல் தொடர்ந்து வாழவும் வழி செய்யப்பட்டது. ஜெபம் கேட்பதற்கான ஆசீர்வாதத்தை மாத்திரமல்ல, அதற்கும் மேலாகவும் தேவனால் நமக்குக் கொடுக்கவும் வழிசெய்கிறது. உங்களுடைய பிள்ளைகளின் இரட்சிப்பிற்காகவும், கணவன், மனைவி இரட்சிப்பிற்காகவும் மற்றவர்கள் இரட்சிப்பிற்காகவும் ஜெபிக்கிறவர்களே! நாம் கேட்பதற்கும் மேலாக தேவன் செய்கிறார் என்பதை நினைவு கூறுங்கள்.

கடந்த நூற்றாண்டில் மிஸ்டர். பெல்லி என்ற தேவ ஊழியனின் தாய், கொடூரமான தன் கணவனுக்காக ஜெபிப்பதில் ஏறக்குறைய நம்பிக்கையை விட்டுவிட்டார்கள். தன்னுடைய மகனுக்காக ஜெபித்தபொழுது, அந்த மகன் பன்னிரண்டு வயதாயிருக்கும்போது இரட்சிக்கப்பட்டான். தாயானவள் குடும்ப ஜெபத்தை தன் மகனை நடத்தும்படி கேட்டுக்கொண்டாள். குடும்ப ஜெபத்தில் ஒருபோதும் கலந்திராத தன்னுடைய கணவன், அவனுடைய மகன் எப்படி குடும்ப ஜெபத்தை நடத்திகிறான் என்று நின்று பார்த்துக்கொண்டிருந்த பொழுது தேவனால் தொடப்பட்டு இரட்சிக்கப்பட்டான். பிறகு அந்த தாயானவள் "என் மகனுக்காக ஜெபித்தேன், ஆனால் தேவனோ என் கணவரையும் இரட்சித்து எனக்கு கொடுத்தார்" என்று சொல்லக்கூடிய விதத்தில் தேவன் ஆசீர்வதித்தார். கீழே கிடக்கும் கொஞ்சம் கதிர்களை பொறுக்கிக் கொண்டுவரபோன ரூத்திற்கு, அரிக்கட்டுகளின் நடுவே பொறுக்கிக் கொள்ளும்படியாக போவாஸினால் அனுமதி கொடுக்கப்பட்டது. பின்பு போவாஸே கணவனாக தேவனால் ரூத்திற்கு கொடுக்கப்பட்டான். **"யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபுக்கு முன் இருந்த எல்லாவற்றைப்பார்க்கிலும் இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார்."(யோபு 42:10)** "என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை

உனக்கு அறிவிப்பேன்.” தேவன் வாக்குத்தத்தத்தோடு தன்னுடைய மாறாத உண்மைத் தன்மையையும் இணைத்திருக்கிறார். முழு இருதயத்தோடும் கிருபையின் கதவைத் தட்டு. நீ எதிர்மறையான பதிலை பெறமாட்டாய். நீ கேட்பதற்கும் மேலாக உனக்கு செய்து, பெரியகாரியங்களை உனக்கு கட்டளையிடுவார்.





## Contact Us

**Reformed Baptist Church India**

**Pastor: Dr.A.David Elangovan**

**Mobile: +91 98427 67184**

**Mail: reformedbaptistchurch@gmail.com**

**Our Website:**
www.tamilchristianmessages.com
www.reformedbaptistchurch.in

**Our Facebook page:**
https://www.facebook.com/tamilchristianmessages

**Our Android Mobile app now in play store:**
www.bit.do/dailydevotion